செ.வெ.எண்: 30 நாள்: 11.01.2017

**அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம்,சத்தியமங்கலத்தில் அம்மா வார சந்தையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.**

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற தொகுதியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் கீழ் அம்மா வார சந்தையினை கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.ஆறுமுகம் அவர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் 10.01.2017 அன்று துவக்கி வைத்து விற்பனையினை பார்வையிட்டு பேசியதாவது:

பொதுமக்கள் தங்களுக்கு தேவையான காய்கறிகளை நீண்ட தூரம் சென்று வாங்கி வருவதில் ஏற்படும் சிரமங்களை தவிர்க்கும் வகையில் அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், சத்தியமங்கலம் கிராமத்தில் அம்மா வாரச்சந்தை துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இச்சந்தை ஒவ்வொரு வாரமும் செவ்வாய்கிழமைகளில் செயல்படும். இதில் பொதுமக்கள் தங்களுக்கு தேவையான தக்காளி, கத்தரிக்காய், உருளைகிழங்கு, பீன்ஸ், வெங்காயம் உள்ளிட்ட பல்வேறு காய்கறிகளை பெற முடியும். இதன் மூலம் இப்பகுதி பொதுமக்களின் அலைச்சல் தவிர்க்கப்பட்டு தங்களுக்கு தேவையான காய்கறிகளை தங்களது பகுதிகளிலேயே பெற்று பயன்பெற முடியும்.

இவ்வூரில் உள்ள சிவன் கோயிலுக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் அலங்கார வளைவு அமைக்கப்படும். இதே போன்று இவ்வூரில் உள்ள குளத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் விருப்புரிமை நிதியின் கீழ் தூர்வாரப்படுவதுடன் ரூ.30 இலட்சம் மதிப்பில் திருமண மண்டபம் கட்ட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே தமிழகஅரசின் இத்தகைய மக்கள் நலத்திட்டங்களை பொதுமக்கள் அனைவரும் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

முன்னதாக கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் எம்.எம்.373 நார்த்தாமலை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் பயனாளிகளுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு மற்றும் விலையில்லா வேஷ்டி, சேலைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் திருமதி.ந.மிருணாளினி, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித்தலைவர் திரு.செல்லத்துரை, கூட்டுறவு சங்கத்தலைவர் திரு.ராமசாமி, ஆத்மா குழுத்தலைவர் திரு.சாம்பசிவம், முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**